

100 நாள் வேலைத்திட்ட நிதி ரூ 4034 கோடியை வழங்காத மத்திய ஒன்றிய அரசைக் கண்டித்து தருமபுரி மாவட்ட தி.மு.க.வினர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் முன்னாள் கழக மாவட்டப் பொறுப்பாளர் தர்மச்செல்வன் தலைமையில் 700 கும் மேற்பட்ட தி.மு.க.வினர் நூறுநாள் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு முறையாக ஊதியம் வழங்க வில்லை என பதாதைகளை ஏந்தி பல்வேறு கோஷங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர் சோலை மணி, மாவட்ட வத்தகர்அணி அமைப்பாளர் துரைசாமி, மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செந்தில்குமார், பொறியாளர் அணி அமைப்பாளர் சின்னசாமி , மாவட்ட விவசாய தொழிலாளர் அணி மடம் சின்னசாமி, முக்கிய பொறுப்பாளர்கள் கோபி ,வைத்திலிங்கம், எவரெஸ்ட் மாதையன், நல்லமுத்து, தென்னரசு, பூபால், கிருஷ்ணமூர்த்தி அண்ணாதுரை வெங்கடேசன் கிளை செயலாளர் சாந்தரூபன், சிவகுமார், சுப்பிரமணி, குபேந்திரன், ராதாகிருஷ்ணன் , கோவிந்தன் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



கரூர் அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கில், கரூர் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில், மாணவச்செல்வங்களுக்கு, உயர்கல்விக்கு வழிகாட்டிடும் 'என் கல்லூரி கனவு' நிகழ்ச்சியை மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், உயர் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், மாணவ மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# அரசு கலை அறிவியல் கல்லூரி பட்டமளிப்பு விழா!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்று 340 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்!

அரியலூர், ஏப். 3 -

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், கல்லூரி தொடங்கிய 2020-2023 மற்றும் 2021-2024 ஆகிய ஆண்டுகளில் இளங்கலை தமிழ், ஆங்கிலம், இளமறிவியல் கணிதம் மற்றும் கணினி அறிவியல் பிரிவுகளில் கல்வி பயின்று கல்லூரி படிப்பை முடித்த மாணாக்கர்களுக்கான முதலாவது பட்டமேற்பு விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் 340 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ. இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் கலந்துகொண்டனர்.

பட்டமேற்பு விழாவில் மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் பேசியதாவது

வாழ்வின் மிக முக்கியமான காலக்கட்டம் கல்லூரி படிப்பு. கல்லூரி படிப்புதான் வாழ்க்கையின் திசையை நிர்ணயம் செய்கிறது. கல்லூரி படிப்பு முடித்து வாழ்வின் அடுத்த கட்டத்திற்கு செல்ல இருக்கின்ற மாணவ, மாணவியர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். சமஸ்கிருதம் படித்திருந்தால்தான் மருத்துவம் படிக்கலாம் என்ற சட்டம் ஒரு காலத்தில் இருந்தது. அந்த சட்டங்களையெல்லாம் மாற்றி இன்று எல்லாரும் கல்வி பெறலம் என்ற நிலை உருவாகி தமிழ்நாட்டில் ஒரு பெரிய கல்விப் புரட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் மற்ற பிற மாநிலங்களில் உயர்கல்வி பயில்பவர்களின் எண்ணிக்கை 27 சதவீதமாக உள்ளது. அதனை 50 சதவீதமாக உயர்த்திட இந்திய ஒன்றிய அரசு இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையானது ஏற்கனவே 52 சதவீதமாக உள்ளது.

எல்லோரும் உயர்கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தில்தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் புதுமைப்பெண் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். பெண்கள் கல்வி கற்றால் சமூகம் முன்னேற்றம் பெறும் என்ற அடிப்படையில், மாணவிகள் படிப்பினை கைவிட்டுவிடக்கூடாது தொடர்ந்து அவர்கள் உயர்கல்வி பெறவேண்டும் என்ற நோக்கத்தில் மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு தமிழ்ப்புதல்வன் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு அவர்களுக்கும் ரூ.1000 மாதந்தோறும் வழங்கப்படுகிறது. புதுமைப்பெண் திட்டத்தினை செயல்படுத்திய பிறகு உயர்கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை 85 சதவீதமாக உயர்ந்துள்ளது என புள்ளிவிவரம் தெரிய வந்துள்ளது. மேலும், அதிகளவில் பெண்களை உயர் கல்வியில் சேர்ப்பதற்கு பெற்றோர்கள் முன்வந்திருப்பதாகவும் மாநில திட்ட க்குழுவின் ஆய்வில் வெளிவந்திருக்கிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் 100 சதவீதம் மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெற்றிருக்கவேண்டும் என்ற நோக்கத்தில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், படித்து முடித்தவுடன் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி வரும் வகையில் புதிய தொழில்களை தமிழ்நாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென உலகளவில் பயணம் செய்து பல்வேறு நாட்டைச் சார்ந்த தொழிலதிபர்கள் தமிழ்நாட்டில் தொழில் துவங்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்கள். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தினை 1 ட்ரில்லியன் டாலர் என உயர்த்துவது தான் நோக்கம் என அறிவித்து புதிய தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் கொண்டுவரப்படுகிறது. அதன் மூலம் வேலைவாய்ப்பிற்கான வழிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வேலை வழங்கும் நிறுவனங்கள் மாணவ, மாணவிகளிடம் எதிர்பார்க்கின்ற திறன்களை மேம்படுத்துவதற்காக நான் முதல்வன் திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள். அரியலூர் மாவட்டம் ஒரு காலத்தில் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக இருந்த நிலை மாறி கடந்த ஆண்டு 10 வகுப்பு பொதுத்தேர்வு முடிவில் மாநிலத்தில் முதலிடம் பிடித்து, கல்வியில் முன்னேற்றம் பெற்றுவருகிறது. வரும் காலங்களில் அரியலூர் மாவட்டத்தில் கல்வி பயின்றவர்களின் எண்ணிக்கையும், புதிய தொழில் தொடங்குபவர்களின் எண்ணிக்கையும் உயர வேண்டுமென்றால் மாணவர்கள், கல்லூரி பேராசிரியர்கள் உள்ளிட்ட அனைவரும் அதற்கான பணியினை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். எனவே, முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளதிட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி வாழ்கையில் முன்னேற்றம் பெற வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார். அதனைத்தொடர்ந்து மாணவ, மாணவிகள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் உடையார் பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் க.ரமேஷ், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன் கல்லூரி அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அரசு அலுவலர்கள், பெற்றோர்கள், மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### சாதாரண மக்களின் மீது பேக்கிங் அரிசி - பசுக்களின்

# உணவுக்காக பயன்படுத்தப்படும் தவிட்டிற்கும் சுமத்தியிருக்கும் வரியை நீக்குக!

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஏப். 3 -

எங்களது தமிழ்நாடு அரசு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் தமிழ்நாடு அரசு கூட்டுறவு துறையின் மூலமாக வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள மக்களுக்கு 20 கிலோ வரை இலவச அரிசி வழங்கி மிக சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

ஆனால் ஒன்றிய பா.ஜ.க. அரசு 1 கிலோ முதல் 25 கிலோ வரை பேக்கிங் செய்யப்படும் அரிசி பைகளுக்கு 5% GST விதித்து ஏழை மக்களின் கஷ்டத்தை ஏந்துகிறது. அதேபோல் தமிழ்நாடு பசுக்களின் உணவான அரிசி ஆலைகளில் தவிடுக்கும் ஒன்றிய அரசு 5% GST வரியை விதித்துள்ளது. GST வரி வசூலில் சுமார் 64 சதவீதம் சாதாரண மக்களிடமிருந்து வருகிறது; 33 சதவீதம் நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்தும், வெறும் 3 சதவீதம் மட்டுமே பெரும் பணக்காரர்களிடமிருந்தும் வருகிறது. பிரதமர் குஜராத் முதல்வராக இருந்த போது, ஜி.எஸ்.டி. ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்றும், தேவையான உள் கட்டமைப்பு இல்லாமல் அதை செயல்படுத்துவது சாத்தியமற்றது என்றும் கூறினார்.

மக்களுக்கு பெரும் சுமையை சுமத்திய ஒன்றிய அரசு 5% வரியை விளக்கப்படுமா என்று ஒன்றிய நிதி அமைச்சகத்தை தமிழ்நாடு அரசு சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

சபாநாயகர் அவர்களே, சாதாரண மக்களின் மீது பேக்கிங் அரிசி மற்றும் பசுக்களின் உணவுக்காக பயன்படும் தவிட்டிற்கும் சுமத்தியிருக்கும் 5% gst வரியை விளக்கவேண்டும் என்று மீண்டும் ஒருமுறை தங்கள் மூலமாக ஒன்றிய அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தினார்.





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கும்பகோணம் மாநகர தி.மு.க. சார்பாக மாநகரச் செயலாளர் துணை மேயர் சு.ப.தமிழழகன் ஏற்பாட்டில் கும்பகோணம் உச்சிப்பிள்ளையார் கோயில் எதிரே புதிதாக அமைக்கப்பட்ட தண்ணீர் பந்தலை மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஆகியோர் திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, நீர்மோர், குளிர்பானம் ஆகியவற்றை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் குட்டி.தெட்சிணாமூர்த்தி, ஜெ.சுதாகர், எஸ்.வாசுதேவன், ப்ரியம் ஜெ. சசிதரன், எஸ்.சிவானந்தம், எஸ்.இரவிச்சந்திரன், பகுதி செயலாளர்கள் அ.செல்வராஜ், கல்யாணசுந்தரம், கிருஷ்ணமூர்த்தி, கண்ணன், ஆசைத்தம்பி, மனோகரன், பாபு.நரசிம்மன், டி.ஆர்.அனந்தராமன், எஸ்.முருகன், சிவக்குமார் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தமிழக முதலமைச்சர் மற்றும் மாநில இளைஞரணி செயலாளர் ஆணைக்கிணங்க தமிழகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் உள்ள ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது கண்டன ஆர்ப்பாட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். வெங்கடேசன், கோவிந்தன், ராஜேந்திரன் , வெங்கடப்பன் , சாஜித், சந்தோஷ் குமார் தினேஷ் ராஜன் உள்ளிட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் , 100 நாள் வேலை பணியாளர்கள் உள்ளிட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கண்டண முழக்கங்களை எழுப்பினார்கள்.

### ‘ஜிப்லி’ தொழில்நுட்பத்துடன் கூடிய

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘கார்ட்டூன் வைரல்’!



சென்னை, ஏப்.1

**‘ஜிப்லி’ தொழில்நுட்பத்துடன் கூடிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் “கார்ட்டூன் வைரல்’ ஆகியுள்ளது.**

ஜப்பானில் இயங்கும் ‘ஜிப்லி’ஸ்டூடியோ, அனிமேஷன் படங்களை, கைகளால் வரைந்து கதைசொல்லும் முறையை 30 ஆண்டுகளுக்கு முன்பே அறிமுகம் செய்தது.

உலகம் முழுவதும் மிகவும் பாராட்டத்தக்க அனிமேஷன் ஸ்டுடியோக்களில் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இந்த ஸ்டுடியோ வடிவமைத்த ஜிப்லி அனிமேஷன் கதைகளில், ‘மை நெய்பர் டோட்டோரோ’, ‘கிகிஸ் டெலிவரி சர்வீஸ்’, ‘போன்யோ’ ஆகிய அனிமேஷன்கள் பல்வேறு சர்வதேச விருதுகளை பெற்றுள்ளன. மேலும், இந்த நிறுவனத்தின் அனிமேஷன் ஜிப்லி கதைகள் ஆஸ்கருக்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஜிப்லி அனிமேஷன் படங்கள் சமூகவலைதளங்களில் திடீரென தற்போது டிரெண்டிங் ஆகிவருகின்றன. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில் நுட்பத்தின் மூலம் ஒரு புகைப்படத்தை, அச்சு அசலாக ஜிப்லி அனிமேஷன் படங்கள் போல் உருவாக்கி. அதை நெட்டிசன்கள் டிரெண்டிங் செய்து மகிழ்ந்து வருகிறார்கள்.

சமீபத்தில், சினிமா பிரபலங்கள், கிரிக்கெட் பிரபலங்கள் என அனைவரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி ‘ஜிப்லி’ கதாபாத்திரங்களாகவே தங்கள் புகைப்படத்தை மாற்றி டிரெண்ட். செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில், தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டு கழகம், நான் முதல்வன் திட்டத்தின் பயனாளிகளுடன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சிறந்த நினைவுகளை ஜிப்லி அனிமேஷன் படங்களாக செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கி உள்ளது. அதை, சமூக வலைதளங்களில் பதிவிட்டுள்ளது.

அந்த வகையில், நான் முதல்வன் பயனாளிகளுடன் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செல்பி எடுத்துக் கொள்வது போலவும், அந்தத் திட்டத்தால் பயன் அடைந்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கிக் கவுரவிப்பது போன்றும், அனைவருடனும் குழு புகைப்படம் எடுத்துக் கொள்வதுபோலவும் ஜிப்லி கார்ட்டூன் ஏ.ஐ. புகைப்படத்தை தொழில்நுட்பம் மூலம் உருவாக்கியுள்ளது.

மேலும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நான் முதல்வன் திட்டப் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் வழங்குவது போன்ற புகைப்படத்தையும் ஜிப்லி அனிமேஷன் காட்சியாக உருவாக்கி டிரெண்ட் செய்துள்ளது.

### திருவாரூர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்

# சோபா கணேசன் தந்தை அரசு எம்.உலகநாதன் மறைவு!



திருவாரூர், ஏப். 3 -

திருவாரூர் மாவட்ட மகளிர் அணியின் அமைப்பாளரும், திருவாரூர் மாவட்ட ஊராட்சி முன்னாள் கவுன்சிலருமான சோபாகணேசன் அவர்களுடைய தந்தையார், அரசு.எம். உலகநாதன் அவர்கள் உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த அரசு.எம்.உலகநாதன் அவர்களுக்கு முத்துசாமி, சிவானந்தம், முருகா னந்தம் என்கிற மகன்களும், சோபா கணேசன், இளவரசிசெந்தில்குமார் என்கிற மகள்களும் உள்ளனர். இதில் சோபா கணேசன் திருவாரூர் மாவட்ட மகளிரணி அமைப்பாளராக உள்ளார். அரசு எம்.உலகநாதன் அவர்களின் மறைவின் தகவலறிந்த அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி எ.கே.எஸ். விஜயன், ஒன்றிய செயலாளர் டி.எஸ்.டி.முத்துவேல்,சித்தேரி சிவா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் தங்கள் இரங்கலை தெரிவித்துள்ள நிலையில், மன்னார்குடி பைங்காநாட்டில் வைக்கப்பட்டுள்ள அன்னாரது உடலுக்கு கழக தோழர்கள் தங்கள் இறுதி அஞ்சலி தெரிவித்தனர். மறைந்த அரசு.எம்.உலகநாதன் அவர்களின் இறுதி ஊர்வலம் 02.04.2025 புதன் கிழமை அன்று மாலை 5. மணிக்கு அவரது சொந்த ஊரான பைங்காநாட்டில் நடைபெற்றது.



தருமபுரி கிழக்கு மாவட்டம் ஏரியூர் ஒன்றிய கழக செயலாளர் என்.செல்வராஜ் தலைமையில் 100 நாள் வேலை உறுதித் திட்டத்திற்கு ரூ.4034 கோடி நிதி வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. மோடி அரசைக் கண்டித்து ஏரியூர் பஸ் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஒன்றிய கழக நிர்வாகிகள் பி.பச்சமுத்து, ஜி.சம்பத்குமார்,சௌந்திரராஜன்,ஆசி தனபாலன் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.